**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.1/2024**
**Prosecution Witness – PW.8**

| | |
|---|---|
| Name | :திரு. வேல்முருகன் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

(A1 and A2 are present.)

முதல் விசாரணை–

நான் தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் உதவி மேலாளராக (இயக்கம்) பணியில் இருக்கிறேன். 10.01.2022 தேதி அன்று இராணி தோட்டம் பணிமனை 2 ல் கிளை மேலாளராக பணியில் இருந்த போது அன்றையதினத்தில் இயங்கிய தடம் எண்.7F PCG பேருந்து எண்.TN 74 N 1693 நாகர்கோவிலில் இருந்து மிடாலம் செல்லும் போது இரவு 10.45 மணி அளவில் பேருந்தின் முன் பக்க கண்ணாடி இரண்டு நபர்களால் கல்லெறிந்து கண்ணாடி உடைக்கப்பட்டதாக தகவல் கிடைக்கப்பட்டது. இரணியல் காவல் நிலையத்தில் தகவல் கொடுத்து மேற்படி பேருந்தின் முன்பக்க கண்ணாடிக்கு சேதார துறை மதிப்பீடு கண்ணாடியின் மதிப்பு ரூ.5000/– மற்றும் கண்ணாடி மாட்ட Labour Charge ரூ.1740/– என மதிப்பீடு செய்யப்பட்டு Cost Of Damage என்னால் வழங்கப்பட்டது. மொத்தம் ரூ.6740/– ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படுவது சேத மதிப்பீடு சான்றிதழ் நான் வழங்கியது. அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**